ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2311/39 - 2022 දෙසැම්බර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.22
2311/39 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்*

*1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் மூலம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அவரால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2022, திசெம்பர் 22.*

ஒழுங்குவிதிகள்

*1981,* சனவரி மாதம் 23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி இல. *125* இல் வெளியிடப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் விதிமுறைகள் இதன் மூலம் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது :

ஒழுங்குவிதிகள் 3.(1)(ஆ) இல், ஒழுங்குவிதிகள் 3.(1)(இ) மற்றும் (ஈ) என புதிய ஒழுங்குவிதிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சேர்க்கப்படுகின்றன.

"(இ) தனது பணியிடத்தில் குறைந்தபட்சம் பதினைந்து பணியாளர்களைக் கொண்டிருக்கும் எந்தவொரு தொழில் வழங்குநரும் *2023*, பெப்புருவரி 01 ஆந் திகதி முதல் கணினி அமைப்பு அல்லது கையடக்க இலத்திரனியல் சாதனத்தைப் பயன்படுத்தி இணைய வழியில் பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(ஈ) தனது பணியிடத்தில் குறைந்தபட்சம் பதினைந்து ஊழியர்களைக் கொண்டுள்ள அனைத்து தொழில் வழங்குநர்களும் மாதாந்த விபரத்திரட்டுக்களை இணைய வழியில் சபைக்கு அனுப்ப வேண்டியது அவர்களது கடமையாகும். இந்தச் செயன்முறை *2023*, பெப்புருவரி 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்."

EOG *12-0284*

1A - PG 6115 — 506 (2022/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.